# 3

# அன்பு & கீழ்ப்படிதல்

## (யோவான் 14)

*“நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்” (வசனம் 15).*

இயேசு தாம் இங்கிருந்து சென்ற பின்பு, தமது அப்போஸ்தலர்களின் ஊழியங்கள் பற்றிய ஒரு விவரிப்பை மறு உறுதிப்படுத்திய பின்பு, அவர்மீது அவர்கள் கொண்டிருந்த அன்பை நினைவூட்டினார். இதற்கு முன்பு அவர்கள் மீது தாம் கொண்டிருந்த அன்பைப் பற்றி அவர்களுக்குக் கூறியிருந்தார். அவர்கள் மீதான அவரது அன்பானது, ஊக்கமிழந்த அவர்களின் இருதயங்களுக்கு நம்பிக்கையையும் வெளிச்சத்தையும் கொண்டுவந்திருக்க வேண்டும், அதே வேளையில் அவர் மீதான அவர்களின் அன்பானது அவரது இருதயத்திற்கு இசையைக் கொண்டு வந்திருந்து, உலகத்தின் இரட்சிப்பிற்காக அவர் சுமந்த கனத்த பாரத்தை இலேசாக்கி இருக்க வேண்டும்.

அவர்களின் அன்பு பற்றிய அவரது வார்த்தைகள், முதல்பார்வையில் அவர்களின் உரையாடலின் சந்தர்ப்பப் பொருளுடன் சிறிதளவே தொடர்புடைய இடைச் செருகலாகக் காணப்படுகிறது. இருப்பினும், இவ்வார்த்தைகளை நாம் இன்னும் நெருங்கிக் கவனிக்கும்போது, அவரது சீஷர்கள் செய்வதாக அவர் மனக் காட்சியில் கண்டிருந்தவற்றை மிகச்சரியாக அவர்கள் செய்வார்கள் என்பதற்கான தூண்டுதலைச் சுட்டிக்காண்பித்தலின் மூலம் இவைகள் (இவ்வார்த்தைகள்) இவற்றிற்கு முன்பும் பின்பும் வருகிற விளக்கவுரைகளுடன் உறவுபட்டுள்ளதை நம்மால் காண முடிகிறது.

ஆங்கிலத்தில் ஒன்பது (கிரேக்கமொழியில் எட்டு மற்றும் தமிழ் மொழியில் ஆறே ஆறு) வார்த்தைகளிலேயே, இயேசு தமது அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்கள் ஆகியோருடனான தமது உறவில் அன்பு மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் இடத்தை வலியுறுத்தினார். அவர் கிறிஸ்தவத்தின் மிகவும் இன்றியமையாத போதனைகளைச் சுருக்கமான ஒரு வாக்கியத்தில் இட்டு, உண்மையான, கலப்படமற்ற அன்பைக் கொண்டு அவரை அன்புசெய்யுமாறு நம்மை அழைக்கிறார்.

### தூய்மை

*முதலாவது, நாம் கொண்டிருக்க வேண்டிய இந்த அன்பின் தூய்மையை நாம் கவனிக்கிறோம்.* இயேசு தமது விளக்கத்தை ஒரு நிபந்தனை வடிவத்தில் சொற்றொடராக்கி, “நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் ...” என்று கூறினார் (14:15). அவர் இந்த அப்போஸ்தலர்களையும் பிற்பாடு அவரைப் பின்பற்றுபவர்களையும், அன்பின் தூய்மையான தூண்டுதலினால் தமது பணிகளைச் செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

இயேசு நமக்கு எவ்விதமான ஊதியத்தையும் தரப்போவதில்லை என்று கூறினார். இந்த அப்போஸ்தலர்கள், வேதவசனங்களில் தாங்கள் உள்ளடங்குவதால், தங்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் வசை எதைப்பற்றியும் ஒன்றும் அறியாதிருந்தனர். அவர்கள் தங்களுக்காகக் காத்திருந்த உபத்திரவம் அல்லது தங்கள் கீழ்ப்படிதலும் ஊழியமும் மிகவும் கடினமான சூழ்நிலைகளில் வெளிப்படுத்தப்படும் என்பவற்றைப் பற்றிய அவரது எச்சரிக்கையை இன்னமும் புரிந்துகொள்ளாதவர்களாக இருந்தனர். இயேசு தமது உரையில், இழப்பீடு, வேதனை மற்றும் தியாகம் ஆகியவற்றிற்கு மேலாக எழும்பினார் மற்றும் அவர் சீஷத்துவத்தை அவர் அன்பின் சமதளத்தின் மீது வைத்தார். அவரைப் பின்பற்றுபவர்கள் அவர்மீது தங்கள் இருதயத்தில் கொண்டுள்ள அன்பின் நிமித்தம் அவரது ஊழியத்தைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## நிச்சயத்தன்மை

*இரண்டாவது, இந்த அன்பின் நிச்சயத்தன்மையை நாம் உய்த்துணருகிறோம்.* இயேசு, “You will keep My commandments” [NASB]; “keep my commandments” [NKJV]; *“என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்”* [Tamil] என்று கூறினார் *(14:15)*. அவரது சீஷர்கள் அவர்மீது அன்புகூர்ந்தால் என்ன நடக்கும் என்பது பற்றி சந்தேகங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படவில்லை. அன்பு இருக்கும்போது, உண்மையான செயல்பாடுகள் தொடருகின்றன.

இவ்விடத்தில், நமது கர்த்தர் [NASB வேதாகமத்தின்படி], அன்பு இருதயத்தில் வாழ்ந்திருந்தால், கீழ்ப்படிதல் விளைகிறது என்று மறைமுகமாக உணர்த்தும் விதத்தில் எதிர்கால வினைச் சொல்லைப் பயன்படுத்தினார். அன்பு என்பது, இயேசுவுக்குக் கீழ்ப்படிவதா இல்லையா என்பதைப் பற்றி விவாதம் செய்வதில்லை. அன்புகூருகிற ஒருவர், அவரது சித்தத்தை இயேசுவின் சித்தத்திற்கு இணங்கச் செய்தலை, வாழ்வின் மிக உயர்வான சிலாக்கியமாகக் கண்ணோக்குகிறார். அவர் இயேசுவின் கட்டளைகளை, சுமப்பதற்கான ஒரு பாரமாக அல்ல, ஆனால் தழுவிக்கொள்வதற்கான ஒரு ஆசீர்வாதமாகக் காணுகிறார்.

## விடாமுயற்சி

*மூன்றாவது, இந்த அன்பின் விடாமுயற்சியை நாம் காணுகிறோம்.* இயேசு, “என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்” (14:15) என்று கூறினார். அவர் ஒரு வாழ்வுநடையை, அன்றாடத் தேடுதலைச் சுட்டிக்காண்பித்தார். உண்மையான அன்பு என்பது அவ்வப்போதான முயற்சியல்ல; அது கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் இடைவிடாது தொடருதலாக உள்ளது.

அன்பு என்பது நிலைத்த தன்மையினால் பண்புபடுத்தப்படுகிறது. இயேசுவைப் பின்பற்றுதல் என்பது, ஏதோ உணர்வுவசப்பட்ட செயலல்ல; அது அன்பு மாத்திரமே கொண்டுவரக் கூடிய ஒரு ஆழமான உறுதிப்பாடாக உள்ளது. அது நமது சிலுவைகளை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றுதலை உள்ளடக்குகிறது. நம்மை நாமே மறுதலிக்கும் ஒவ்வொரு முறையும் நாம் இதை *விட்டுவிடுபவர்களாக* இருக்கிறோம், நமது சிலுவைகளைச் சுமக்கவும் அவரைப் பின்பற்றுபவர்களாக நம்மைக் காத்துக்கொள்ளவும் நாம் தீர்மானிக்கும்போது,

நாம் இதை *மேற்கொள்பவர்களாக* இருக்கிறோம் (காண்க மத்தேயு 16:24).

## முன்னுரிமை

*நான்காவது, இந்த அன்பின் முன்னுரிமையை நாம் உற்றுக் கவனிக்கிறோம்.* இயேசு, "என் கற்பனைகளை" என்று கூறினார் (14:15). உண்மையான அன்பு என்பது, கனவுவடிவானதாகவோ அல்லது தெளிவற்றதாகவோ இருப்பதில்லை; இது வாழ்விற்கு எல்லா விஷயங்களையும் நம்புதல் என்பதாக இருப்பதில்லை. மாறாக இது குறிப்பிடத்தக்க, அர்ப்பணித்த மற்றும் உண்மைநிலையான விஷயமாக உள்ளது. இயேசுவை அன்புகூரும் ஒருவர், வழிகாட்டும் நட்சத்திரம் என்ற வகையில் தெய்வீகக் கட்டளைகளைப் பயன்படுத்துவதன் மூலம், தமது செயலின் ஓட்டத்தைத் திட்டமிடுகிறார்.

## முடிவுரை

இயேசு வழிகாட்டுதல்களைக் கொடுத்தார். அப்போஸ்தலர்கள், அவர்மீது கொண்டிருந்த தங்களது அன்பின் காரணமாக, அந்த வழிகாட்டுதல்களைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு, மரணமானது தங்கள் தேடுதல்களை முடித்து வைத்த வரையிலும் அவற்றைப் பின்பற்ற வேண்டி இருந்தது. நாம் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு நமக்குக் கூறியிருக்கிறார், மற்றும் அவரது சித்தத்தைச் செய்யும்படி அன்பானது நம்மைத் தூண்டுகிறது. இயேசு கட்டளையிடுகிறார் மற்றும் அன்பு கீழ்ப்படிகிறது. இயேசு பேசுகிறார் மற்றும் அன்பு பயபக்தியுடன் கவனிக்கிறது.

இயேசுவின் தேவை என்ன? இந்தக் கேள்விக்கான பதிலானது, யோவான் 14:15ல் உள்ள சுருக்கமான கூற்றில் உருப்படுத்தப்பட்டுள்ளது. அவரது ஊழியம் பின்வரும் மாபெரும் சத்தியத்தின் மீது அமைவுகொண்டுள்ளது: அவரது சீஷர்கள் அவரது சித்தத்தைச் செய்யும் அன்பினால் நெருக்கப்படுகின்றனர்.

---

*"இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான். நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்துகொள்ளுகிறோம். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1 யோவான் 5:1-3).*

*"என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்" (யோவான் 14:21).*

*"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன்என்வசனத்தைக்கைக்கொள்ளுவான், அவனில்என்பிதாஅன்பாயிருப்பார்;*

*நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது" (யோவான் 14:23, 24).*